# குழந்தை

## பாதுகாப்புக் கொள்கை -2014

ஆசிரியர்

டாக்டர்.I.செபஸ்தியான் M.A., M.B.A., Ph.D.,



புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளை



## VISION Statement

Kingdom of brotherhood where equality and social justice reign, Everyone's right is respected and equal opportunity is provided for all.

## MISSION Statement

Our organization in participation with the grass root level people seeks to serve irrespective of caste creed or religion, the weaker sections of the society the women, children youth and marginalized communities and offer them the opportunities for developing their potentials leading them to have a self sustaining life.



SJDT Approach is called 'MEALS' approach

**Motivating**
**Equipping**
**Accompanying**
**Linking &**
**Sustaining.**

**SJDT's Approach**

The **MEALS** approach envisages the NGO as a facilitator in motivating and mobilizing the community from the outside and not as "one of the community" equipping the community through skill transfer, accompanying the community by providing relevant back up, and eventually enabling them to link with mainstream resources and services and being instrumental for policy influences.









அன்பு பணியாளர்களே,

வணக்கம், நமது நிறுவனம் குழந்தைகளை மையப்படுத்தி வளர்ச்சி பணிகளை செய்து வரும் ஒரு நிறுவனம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். நமது நிறுவனம் குழந்தைகள் மைய செயல்பாட்டிற்காக பல விருதுகளையும் உலக அளவில் பாராட்டையும் பெற்றுள்ளது என்பதையும் அறிவீர்கள்.

ஏற்கனவே நமது நிறுவனத்தில் குழந்தைகள் பாதுகாப்பு கொள்கை செயல்திட்டம் ஆங்கிலமொழியில் இருந்தது. கடந்த ஆண்டு **KNH-GERMANY** நிதி நிறுவனம் அனைத்து பங்காளர் நிறுவனங்களுக்கும் தகுந்த பயிற்சி அளித்து குழந்தைகள் பாதுகாப்பு கொள்கையை உருவாக்க அழைப்பு விடுத்தது. அதன் அடிப்படையில் அந்த பயிற்சியில் பங்கெடுத்த நமது பணியாளர்கள் சேர்ந்து இந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தை தமிழில் தயார் செய்து நமக்கு அளித்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக மற்ற பணியாளர்களுக்கு மேலும் பயிற்சிகள் அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த செயல்திட்டம் வெளிவரும் இந்த நேரத்தில் இதற்கு உறுதுணையாக இருந்த **KNH - GERMANY & KNH - INDIA** மற்றும் பயிற்சியாளர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்பாக **KNH** இந்திய ஒருங்கிணைப்பாளர் **Mr.Sathesh Samuel** அவர்களுக்கு சிறப்பான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கொள்கையை தமிழாக்கம் செய்து உருவாக்குவதில் முழு உழைப்பை தந்த திரு.வி.ஜோசப் முதன்மை ஒருங்கிணைப்பாளர், (புதுயுகம்) மதுரை அவர்களுக்கும் திரு.எஸ்.பால்ராஜ் முதன்மை ஒருங்கிணைப்பாளர் (புதுவசந்தம்) அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் ஆலோசனை வழங்கிய பணியாளர்களுக்கும், குழந்தைகளுக்கும் பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன்.


குழந்தை பாதுகாப்புக் கொள்கை என்கிற இந்த ஆவணத்தை அனைத்து பணியாளர்களும் நன்கு புரிந்து கொண்டு முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் அன்பு சகோதரர்

Bro.Dr.I.செபஸ்தியான் MA.,MBA.,Ph.D.,








# கொடிப்பாடல்



பாரத தேவியின் மணிக்கொடி பாரீர்
பக்தியுடன் அதை வணங்குவோம் வாரீர் (2)

வீரர்கள் உடல் பொருள் ஆவியும் கொடுத்து
சீரமாய் அடிசிறை அனைத்தையும் பொறுத்து
தீரராய் நம் பாரத தேவிக்கே உழைத்து
திகழ்வதைக் குறித்திடும் ஜெயக்கொடி பாரீர்

(பாரத தேவியின்)

பலவள முளதென குறித்திடும் பச்சை
பரிசுத்த தியாகத்தை காட்டிடும் வெண்மை
நலமுடன் பக்தியை ஊட்டிடும் காவி
நடுநிலை பண்பினை விளக்கிடும் சக்கரம்

(பாரத தேவியின்)

# இந்திய நாட்டு உறுதிமொழி

இந்தியா எனது தாய் நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறப்புகள்.

எனது நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் / பன்முக மரபுச் சிறப்பிற்காகவும் / நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட / என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர், எனக்கு வயதில் மூத்தோர் / அனைவரையும் மதிப்பேன். எல்லோரிடமும் / அன்பும் மரியாதையும் / காட்டுவேன்.

என் நாட்டிற்கும் / என் மக்களுக்கும் / உழைத்திட / முனைந்து நிற்பேன். அவர்கள் / நலமும் வளமும் பெறுவதிலே நான் / என்றும் மகிழ்ச்சி காண்பேன் என்று / உறுதிகூறுகிறேன்.

# தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப் ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

# தமிழ்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்

சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்

தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்

தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!

அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற

எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

தமிழணங்கே!

உன் சீரிளமைக் திறம்வியந்து

செயல்மறந்து வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

# புனித தெலசால் மன்றாட்டு

எங்கள் தந்தையாகிய தெலசால் ஸ்நாபக அருளப்பரே! சமூக மேம்பாட்டு பணியில், ஏழை எளிய குழந்தைகளின் மேம்பாட்டில் நீர் காட்டிய அக்கறையைக் கண்டு வியக்கிறேன். உம்மை போன்று நானும் உறுதியாய் நிலைத்திருந்து அனாதை, ஆதரவற்ற, உடலால் ஊனமுற்ற குழந்தைகளுக்கும், எங்கள் பணி அதிமாய் தேவையான மக்களுக்கும் பணியாற்றி, வறுமை வேற்றுமை ஒழித்து, வளமை ஒற்றுமை உருவாக்க, சமத்துவம் சகோதரத்துவம் மலர செய்ய வல்லமையுடன் உழைப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.



# புனித தெலசால் ஸ்நாபக அருளப்பரை நோக்கி மன்றாட்டு

எங்கள் தந்தையாகிய / புனித தெலசால் ஸ்நாபக அருளப்பரே / உம்முடைய முன்மாதிரியான வாழ்க்கைக்காக / இறைவனை போற்றுகிறோம் / நன்றி கூறுகிறோம். நீர் எம்மீது கொண்டுள்ள அன்பு / எங்களுக்காக இறைவனிடம் மன்றாடுதல் / ஆகிய காரணங்களின் பொருட்டு / உம்முடைய பிள்ளைகளாகிய நாங்கள் / நீர் கடைபிடித்த விசுவாசம் / இறைபணி / பிறர் அன்பு / ஜெபம் / மூவொரு கடவுளின் மகிமைக்காக உழைத்தல் / ஆகிய புண்ணியங்களில் / நாங்களும் / அதிக அளவு பங்கு கொள்ளும் வரத்தை / எங்களுக்குப் பெற்றுத் தருவீராக / ஆமென்!



# நிறுவன உறுதிமொழி

உலக மக்கள் அனைவரையும் / சகோதரராகக் கருதி வாழும் / இந்திய குடிமகன் என்று கூறுவதில் / பெருமை அடைகிறேன். ஏழ்மையில் வாழும் / மக்களின் அறியாமை / வறுமை அகல / விழிப்புணர்வு பெற / அல்லும் பகலும் / அயராது உழைத்து வரும் / புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளை என்னும் / இயக்கத்தின் கொள்கைகளையும் / அதன் சட்ட திட்டங்களையும் / முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். ஆதரவற்ற அனாதையாக்கப்பட்ட / உடலால் ஊனமுற்ற மக்களுக்கு / ஊன்றுகோலாக நின்று / மறுமலர்ச்சி பெற / நல்லுணர்வோடு உழைப்பேன் என்றும் / என்றென்றும் / இயக்கத் தலைமைக்கு கட்டுப்பட்டு / விசுவாசத்துடனும் / நேர்மையுடனும் / உண்மை ஊழியன-ாகத் தொண்டாற்ற / மனப்பூர்வமாக உறுதி கூறுகிறேன்.



# நிறுவன கரு பாடல்

பூக்கள் இணைந்தால் புதுமனம் சேரும்
பூமியைச் செதுக்க நம் கரம் கூடும்
கரங்கள் இணைந்தால் சுமைகள் இறங்கும்
வாழ்வதின் அர்த்தம் தன் வாசல் திறக்கும் - பூக்கள்

I

பணிகள் யாவுமே செய்திடினும்
பயன்கள் அதனாலே வந்திடினும்
தூய வளனாரின் துணை கொண்டு
துவங்கிடு நீ பல புதுத்தொண்டு - பணிகள்
வளனார் பெயரில் இயக்கம் கொண்டு
ஒன்றாய் உழைப்போம் நன்றாய் உயர்வோம் (கரங்கள்)

II

வீதியில் விழுந்த விதைகளைப் போல்
சாலையில் திரிந்திடும் சிறுவர்களை
இறங்கியே இல்லம் அழைத்து வந்து
தாயினும் அன்பாய் காத்திடுவோம் - வீதியில்
பசியும் பிணியும் போரும் பகையும்
பாரினில் மறைய நம் பாரதம் காப்போம் (கரங்கள்)

III

மனித உரிமைகளை காத்திடுவோம்
மகளிர் குழுவினை வளர்த்திடுவோம்
குழந்தைகள் அனைவரும் கல்வி பெற
துணையாய் இணைந்து செயல்படுவோம் - மனித
இருளினைப் போக்கும் ஒளியினை ஏற்போம்
இலக்குகள் காக்கும் வழியினை சேர்ப்போம் (கரங்கள்)

IV

மனநலமியலாக் குழந்தைகளும்
உடல்நலத் திறனால் மாறுபட்ட
குழந்தைகள் இறைவனின் கொடைகளென
அன்புடனே தினம் அரவணைப்போம் - மனநலமியலாக்
விளிம்பினில் வாடும் குழந்தைகள் வாழ
வழியினை நாடும் மொழியினை செய்வோம் (கரங்கள்)

# பொருளடக்கம்


முன்னுரை பக்கம்

1. குழந்தை பாதுகாப்புக் கொள்கையின் ஒட்டுமொத்த கோட்பாடு 12
   - 1.1 நோக்கம்
   - 1.2 நோக்கத்தை செயலாக்கும் முறை
   - 1.3 நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள்
2. குழந்தை பாதுகாப்பு கொள்கையின் அங்கத்தினர்கள் 13
3. குழந்தை பாதுகாப்பு பற்றிய மதிப்பீடு 14
4. தீங்குகளை தடுத்து நிறுத்துவதற்கான வழிமுறைகள் 15
5. பணியாளர்கள் செய்யத்தக்கவை. 15
6. குழந்தைகளுக்கு நேரிடக் கூடிய தீங்குகள் 16
   - 6.1 உடல் ரீதியான தீங்குகள்
   - 6.2 நிராகரிக்கப்படுதல்
   - 6.3 பாலியல் ரீதியான தீங்குகள்
   - 6.4 உணர்வுகளுக்கு எதிரான தீங்குகள்
   - 6.5 சமூக மற்றும் ஜாதி அடிப்படையில் எழும் தீங்குகள்
7. செயல் திட்டம் 18
8. தீங்குகளினால் ஏற்படுகின்ற பாதிப்புகள் 19
9. குழந்தைகளோடு பணியாற்றுவதில் புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளை வழிகாட்டும் நெறிமுறைகள் - நன்னடத்தை விதிகள் 19
   - 9.1 குழந்தைகளோடு வேலை செய்வதற்கான மதிப்பீடுகளும் கொள்கைகளும்.
   - 9.2 குழந்தைகளை காப்பதில் உள்ள கடமைகள்
   - 9.3 புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையின் நடத்தை விதிகள்
   - 9.4 புணியாளர்கள் செய்யத் தகாதவை
10 புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையின் குழந்தை தீங்கிழைப்பு சம்பந்தமான புகார் மற்றும் அறிக்கை அளித்தல் 23
   - 10.1 புகார் எழுப்புதலின் அவசியம்
   - 10.2 பொறுப்பும், பங்களிப்பும்
   - 10.3 புகார் கொடுக்க தயங்குவதற்கான காரணங்கள்
11. அங்கீகாரம் 24
12. பிரச்சனைகளை வெளிக்கொணர்வதில் எழக்கூடிய நம்பகத்தன்மை மற்றும் தவிர்க்கக் கூடாத விஷயங்கள். 25
   - 12.1 நம்பகத் தன்மை
   - 12.2 குழந்தைகளோடு பணியாற்றுவதில் நம்பகத்தன்மை
   - 12.3 நம்பகமான பதிவேடுகள் பராமரித்தல்
13. விசாரணை முறையும், பொறுப்பு அதிகாரிகளும் 28
14. அறிக்கைகளை செயல்படுத்தும் முறை 29
   - 14.1 நிறுவனம் சார்ந்த அறிக்கை
   - 14.2 நிறுவனம் சாராத அறிக்கை
15. மதிப்பீடும் பரிசீலித்தலும் 30
16. உறுதி மொழி படிவம் 31

# புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளை
# குழந்தை பாதுகாப்புக் கொள்கை

## முன்னுரை

புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளை என்னும் இந்நிறுவனம், குழந்தைகள் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் நலனுக்காகவும் இந்திய மற்றும் தமிழக அரசின் ஆதரவோடும் உலகளாவிய சமூக சேவை நிறுவனங்களின் பொருளாதார உதவியோடும் 1992-ம் ஆண்டு தொடங்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்நிறுவனமானது குழந்தைகள் நலன் பேணும் நிறுவனங்களில் ஒரு பங்குதாராகவும், குழந்தைகள் மைய நிறுவனங்களில் முழு ஈடுபாட்டுடனும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

குழந்தைகளுக்கான பாதுகாப்பும், பராமரிப்பும் ஒருபக்கம் நடைமுறையில் இருந்தாலும் குழந்தைகள் உரிமை மீறல்கள் மற்றும் தீங்கிழைப்பதற்கான செயல்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அதற்கான முழுத்தீர்வுகள் இன்னும் காணப்படவில்லை.

குழந்தைகள் உரிமைகள் பாதுகாக்கும் நிறுவனங்களின் பங்குதாரராக செயலாற்றும் புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளை என்னும் இச்சமூக சேவை நிறுவனம், தான் பணிபுரியும் இடங்களிலும் சுற்றுப்புறத்திலும் தீங்குகளுக்கு ஆளாகும் குழந்தைகளை அடையாளம் கண்டு, அவர்களை அத்தீங்கிலிருந்து விடுவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்து முழுமூச்சாக செயலாற்றுகிறது.

முழு ஈடுபாட்டோடு குழந்தைகள் உரிமைக்காக அதிகம் பாடுபடுவதில் இந்நிறுவனம் முக்கிய பங்கு வகிப்பதோடு, முழு நிறுவனமும், முழு நேரமாக குழந்தைகளை விழிப்புணர்வோடு தீங்கிலிருந்து பாதுகாக்கவும், பராமரிக்கப்படவும் விழிப்புணர்வோடு இருப்பதோடு, விழிப்புணர்வின் தாக்கத்தையும் ஏற்படுத்தி அவர்களைத் தீங்கிலிருந்து எப்படிப் பாதுகாப்பது என்பது பற்றியும் அறிந்திருக்கிறது.

குறிப்பாக இந்நிறுவனத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அவர்களின் இலக்குப் பகுதிகளில் எங்கெல்லாம் குழந்தைகளுக்கு தீங்குகள் நேரிடுகிறது என்பதை அடையாளம் கண்டு அவற்றைப் பற்றிய அறிக்கைகள் அனுப்புமாறு அறிவுறுத்தி அக்குழந்தைகளை தீங்குகளிலிருந்து பாதுகாப்பதற்கான அனைத்து வழிமுறைகளையும் செய்து கொண்டிருக்கிறது.

குழந்தைகளுக்கு மத்தியில் பணிபுரியும் நிறுவனங்களுக்குள்ளேயே குழந்தைகளுக்கான உரிமைகள் மீறப்படுதலும், உரிமைகள் மதிக்கப்படாமல் இருப்பதும் கண்கூடாக நடந்து கொண்டிருக்கிற ஒன்று.

குழந்தைகள் நலனுக்காக உழைக்கின்ற நம்மைப் போன்ற நிறுவனங்களிலும் குழந்தைகள் தீங்கிழைப்பால் பாதிக்கப்படுகின்றனர் என்பதையும் நம் நிறுவனம் உணர்ந்திருக்கிறது.

பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பேரில், ஒரு சில தனிநபர்கள் ஆதாயமடைவதற்காக நம்மைப் போன்ற நிறுவனங்களைக் குறிவைத்து, நிறுவனங்களின் நம்பிக்கையைக் குறைவாக மதிப்பிட்டு தங்களின் நிலையை துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

இதனால் குழந்தைகளின் ஆபத்துக்களை அடையாளம் கண்டு அவற்றிலிருந்து மீள்வதற்குத் தேவையான மாற்று வழிகளைக் கண்டறிய வேண்டும்.

பணியாளர்களைத் தெரிவு செய்தல், பணித்தளங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், தீங்குகளுக்கு ஆளான குழந்தைகளைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டுதல் ஆகிய இவை யாவும் குழந்தை பாதுகாப்புக் கொள்கையில் மையக் காரணிகளாக இருக்கின்றன.

## 1. குழந்தை பாதுகாப்புக் கொள்கையின் ஒட்டுமொத்தக் கோட்பாடு :

1. குழந்தைகளாகக் கருதப்படுபவர்கள் 18 வயதிற்குட்பட்டவர்கள் (ஆண் / பெண்)

2. பணியாளர்கள் என்பவர்கள் பணியின் பொருட்டு புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையின் கீழ் பணியாற்றும் முழுநேர, பகுதிநேர ஊழியர்கள், தன்னார்வளர்கள், ஒப்பந்ததாரர்கள், அன்றாட பணியாளர்கள், புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளை செய்கின்ற பணியில் ஏதாவது ஒரு வகையில் தொடர்புடையவர்கள் ஆகியோர் அடங்குவர்.

### 1.1 நோக்கம்

பல்வேறு விதங்களில் பல்வேறு சூழ்நிலைகளில் தீங்குகளுக்கு ஆளாக்கப்படும் குழந்தைகளைக் கண்டுபிடித்து அத்தீங்களிலிருந்து அக்குழந்தைகளைப் பாதுகாத்து பராமரிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு குழந்தை பாதுகாப்புக் கொள்கையின் செயல் திட்டங்களை புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளை நிறுவனமானது, தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் நிறுவப்பட்டு முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

### நோக்கத்தை செயலாக்கும்முறை

1. குழந்தைகளுக்கு நேரிடும் தீங்குகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தல், அத்தீங்குகள் நிகழாதிருப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

2. தீங்குகளிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்தல்.

3. தீங்குகளுக்கு ஆளாகும்போது குழந்தைகள் என்ன செய்ய வேண்டும், அவற்றை யாரிடம் உடனே தெரிவிக்க வேண்டும் என்பது பற்றிய இரகசியங்களை குழந்தைகள் அறிந்திருக்கச் செய்வதோடு அவற்றைப் பய உணர்வின்றி வெளிப்படுத்துவதற்கு ஊக்கம் அளித்தல்.

## 1.2 நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள்

பொதுவாக புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையின் குழந்தை பாதுகாப்புக் கொள்கையானது, தனிப்பட்டமுறையிலோ அல்லது குழுவாகவோ நேரிடும் தீங்குகளிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதில் பல்வேறு முறைகளைக் கையாளுகின்றது.

குழந்தை பாதுகாப்புக் கொள்கையில் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ அங்கத்தினர்களாக இருப்பவர்கள், பணியாளர்கள், தன்னார்வ தொண்டர்கள், இக்கொள்கையோடு தொடர்புடைய பணியாளர்கள் மற்றும் புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையின் மற்ற பணியாளர்கள் ஆகியோருக்கு சரியான முறையில் குழந்தைகளை எவ்வாறு தீங்குகளிலிருந்து பாதுகாப்பது என்பது பற்றிய தெளிவான விளக்கங்கள் மற்றும் அணுகுமுறையை பற்றிய பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன.

## 2. குழந்தை பாதுகாப்பு கொள்கையின் அங்கத்தினர்கள்

- பொறுப்பில் உள்ளவர்
- பணியாளர்கள்
- தன்னார்வ தொண்டர்கள்
- பணியோடு தொடர்வுடையவர்கள்

### பொறுப்பாளர்

குழந்தைப் பாதுகாப்புக் கொள்கையில் பொறுப்பில் உள்ளவர், இக்கொள்கையின் செயல்திட்டங்களை அலுவலகம், குடும்பம் மற்றும் இலக்குப் பகுதிகளில் கடைப்பிடிப்பவராகவும், கண்காணிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

### பணியாளர்கள்

ஒரு பணியாளரின் முக்கிய பொறுப்பானது பணியிடங்களில் தீங்குகளுக்கு ஆளாகும் குழந்தைகளை அத்தீங்கிலிருந்து பாதுகாக்கவும், மேலும் அத்தீங்குகள் குழந்தைகளுக்கு நிகழாவண்ணம் நடவடிக்கை எடுப்பதும் ஆகும்.

### தன்னார்வத் தொண்டர்கள்

தன்னார்வத் தொண்டர்கள் எனப்படுபவர் குழந்தை பாதுகாப்பு கொள்கையின் நோக்கம் மற்றும் செயல்திட்டங்களை முழுமையாக தெரிந்திருப்பவராகவும் மற்றும் அச்செயல் திட்டங்களை செயல்படுத்தும். குழல், இடம் மற்றும் சாத்தியங்களை அறிந்தவராக இருப்பதோடு குழந்தைகளுக்கு நேரிடும் தீங்குகளை தடை செய்பவராகவும், தீங்குகளுக்கு ஆளாக்கப்படும் குழந்தைகளின் அவசரத் தேவைகளை நிறைவேற்றுபவராகவும் இருப்பர்.

குழந்தை பாதுகாப்புக் கொள்கையோடு தொடர்புடைய அதிகாரிகள்

இவர்கள் இக்கொள்கையின் பொறுப்பாளரோடு தொடர்புடையவராக, அறிமுகமானவராக இருப்பர். இவர்கள் குழந்தைகளுக்கு நேரிடும் தீங்குகளை ஆய்பவராகவோ, ஆற்றுப்படுத்துபவராகவோ அல்லது குழந்தைகளுக்கு பொதுவாக எழக்கூடிய பிரச்சனைகளை நிர்வாகத்திற்கும், சமுதாயத்திற்கும் அது பற்றிய விழிப்புணர்வை சமுதாயத்தின் மத்தியில் ஏற்படுத்துபவராகவும் இருப்பர்.

3. குழந்தை பாதுகாப்பு பற்றிய மதிப்பீடு

குழந்தைகளுக்கு நிகழக்கூடிய தீங்குகள் என்று பார்க்கும்போது உலகின் எல்லாப் பகுதிகளிலும் மிகவும் சர்வசாதாரணமாக நிகழக்கூடிய ஒன்றாக மாறிவிட்டது. பொதுவாக குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற தீங்குகள் அனைத்தும் குழந்தைகளின் உரிமைகளையும் பாதிக்கும்.

ஒவ்வொரு குழந்தையின் உரிமைகளும் வளர்ச்சிப்பாதையை நோக்கியதாகவே இருக்க வேண்டும் என்று அகில உலக மாநாட்டு குழந்தைகள் பாதுகாப்பு உரிமைச் சட்டமானது கூறுகிறது. இவற்றில் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் தீங்குகள் களையப்படுதலும், அவர்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்படுதலும் அடங்கும்.

பொதுவாக குழந்தை பாதுகாப்பு கொள்கையின் செயல்திட்டங்கள் குழந்தை பராமரிப்பாளர்களிடையே எந்த அளவுக்கு கையாளப்படுகிறது அல்லது நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்றும், சில சமயம் பணியாளர்களால் குழந்தைகளுக்கு இழைக்கப்படுகின்ற தீங்குகளை ஏற்றுக் கொள்வதுமில்லை, குழந்தைகளுக்கான உரிமைகளும் சரியான முறையில் எல்லாக் குழந்தைகளுக்கும் பகிர்ந்தளிக்கபடவில்லை என்றும் புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையின் குழந்தை பாதுகாப்புக் கொள்கையானது அறிவிக்கிறது.

நிறுவனத்தாலோ அல்லது குழந்தைகள் பராமரிப்பாளர்களாலோ, யாதொரு குழந்தையும் எந்த விதத்திலும் செயல்முறையிலோ அல்லது செயலற்ற முறையிலோ குழந்தைகளுக்கு தீங்குகளை விளைவிக்கக் கூடாது என்று புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையின் குழந்தை பாதுகாப்புக் கொள்கையானது அறிவித்திருக்கிறது.

ஜாதி, மதம், சமயம், கலாச்சாரம், பொருளாதாரம் மற்றும் வேறு எந்த விதத்திலும், எவ்வித வேறுபாடும் இன்றி எல்லாச் சூழ்நிலையிலும் எல்லாக் குழந்தைகளின் வளர்ச்சிக்கும் பாடுபடும் என்று புனிதவளனார் மேம்பாட்டு

அறக்கட்டளையின் குழந்தை பாதுகாப்புக் கொள்கையானது உறுதியளிக்கின்றது.

4. தீங்குகளைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிகள்

குழந்தைகள் பராமரிப்புப் பணியில் உள்ள பணியாளர் மற்றும் உதவிப் பணியாளர்கள் கீழ்க்கண்ட முறைகளைக் கையாள்வதன் மூலம் குழந்தைகளுக்கு நேரிடுகிற தீங்குகளிலிருந்து தடுக்கலாம்.

1. தொடர்ந்து தொடர்பு வைத்திருத்தல்
2. பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
3. வழிகாட்டுதல்
4. குழந்தை பராமரிப்பு பற்றிய பயிற்சியளித்தலும் அவற்றைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வருதலும்

4.1 அறிக்கை வெளியிடுதல்

குழந்தை பராமரிப்பில் உள்ள பணியாளர் மற்றும் உதவிப் பணியாளர்களுக்கு குழந்தை பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பற்றிய தெளிவான விளக்கங்களைக் கொண்ட அறிக்கையை அவ்வப்போது வெளியிடுதல்.

4.2 மதிப்பளித்தல்

தீங்குகள் நேரிட வாய்ப்புகள் உள்ள இடங்களில் குழந்தைகளின் தேவையின் பொருட்டு உடனடியாக அவர்களுக்கு ஏற்படும் தீங்குகளிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களின் நலன் பாதுகாக்கப்படுதல்.

5. பணியாளர்கள் செய்யத்தக்கவை

புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையில் குழந்தை பாதுகாப்பு நிர்வாகமானது அவ்வப்போது குழந்தைகள் மற்றும் அவர்களின் நலனுக்கு எதிராக எழக்கூடிய தீங்குகளை ஆராய்ந்து மேலும் அத்தீங்குகள் குழந்தைகளுக்கு நேரிடாவண்ணம் தடுக்க பல முயற்சிகளைச் செய்து வருகிறது.

மேற்படியாக புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளை குழந்தைப் பாதுகாப்புக் கொள்கையின் பேரில் எடுக்கப்படும் முயற்சிகள்.

1. குழந்தைகளுக்கு நேரிடும் தீங்குகள் பற்றி தீவிர நடவடிக்கை எடுத்தல்.
2. தீங்குகள் சம்பந்தமான நேர்மறையான கருத்துக்களை முன்னிறுத்தி குழந்தைகளை தீங்குகளிலிருந்து பாதுகாத்தல்.
3. குழந்தை பராமரிப்புப் பணியாளர்கள் மற்றும் குழந்தைகளுக்கு நற்காரியங்களில் புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளை எப்பொழுதும்

எச்சூழ்நிலையிலும் உறுதுணையாக இருத்தல்.

4. குழந்தைகளுக்கு நேரிடும் தீங்குகள் பற்றிய காரியங்களுக்கு முறைப்படி சரியான தீர்வு கிடைக்கப்பெறச் செய்தல்.

5. குழந்தைகளுக்கோ அல்லது குழந்தை பாதுகாப்பாளர்களுக்கோ உதவி தேவைப்படும் நேரங்களில், இடங்களில் தாமதமின்றி உதவிகள் கிடைக்க ஏற்பாடு செய்தல்.

6. தீங்குகளிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதில் மிக முக்கியத்துவம் அளித்தல்.

7. ஆற்றுப்படுத்தலின் மூலம் பணியாளர் மற்றும் குழந்தைகளுக்கு நல்வழி காட்டுதல்.

8. குழந்தைகளின் அறிக்கை மற்றும் வேண்டுகோள்கள் சரியான முறையில் கேட்கப்பட்டு அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்தலும் அவர்களின் வேண்டுகோள்கள் அங்கீகரிக்கப்படுதலும்.

9. குழந்தைகளின் பாதுகாப்பின் பேரில் குழந்தைகளின் பெற்றோர், உடன்பிறந்தோர், உறவினர்கள் மற்றும் குழந்தை பாதுகாப்பு சம்பந்தமான அதிகாரிகளிடம், புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளை நல்லுறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுதல்.

10. குழந்தைகளின் உரிமைகளான, வாழ்வதற்கான உரிமை பாதுகாப்பு உரிமை, வளர்ச்சிக்கான உரிமை, பங்கேற்கும் உரிமை இவற்றை கவனத்தில் கொண்டு செயல்படவேண்டும்.

## 6. குழந்தைகளுக்கு நேரிடக்கூடிய தீங்குகள்

வரையறை மற்றும் நிபந்தனைகள்

பொதுவாக எல்லாக் குழந்தைகளும் ஏதாவது ஒரு விதத்தில் தீங்குகளுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் அல்லது ஆளாக்கப்படுகின்றனர். குழந்தைகள் தீங்குகளுக்கு ஆளாவது என்பது குழந்தைகளின் பெற்றோர் மற்றும் பாதுகாப்பாளர்களின் கவனக்குறைவினால் ஏற்படுவதே. சில வேளைகளில் தங்களின் குழந்தைகளுக்கு வருகின்ற தீங்குகளைப் பற்றிய தகவல்களை அறிந்தும் பெற்றோர் மற்றும் பாதுகாப்பாளர்கள் கண்டும் காணாதவர்களாக இருக்கிறார்கள் என்பது மிகக் கண்கூடாக நடக்கின்ற ஒன்றாக இருக்கிறது.

உலக அளவில் குழந்தைகளுக்கு நேரிடும் பொதுவான தீங்குகள்:

குழந்தைகள்,

- உடல் ரீதியாக
- பாலியல் ரீதியாக
- உள மற்றும் உணர்வுகள் ரீதியாக
- நிராகரிக்கப்படுதல் ரீதியாக தீங்கிழைப்புக்கு உள்ளாகின்றனர்

இவ்வாறு பல்வேறு நிலைகளில் குழந்தைகள் குடும்பத்திலோ பணியிடங்களிலோ அல்லது பொது இடங்களிலோ தீங்குகளுக்கு ஆளாவது அவர்கள் அன்றாடம் சந்திக்கும் அனுபவமாக இருக்கிறது.

6.1 உடல்ரீதியான தீங்குகள்

1. காயங்களை ஏற்படுத்துதல்
2. உடலில் காயம் ஏற்படுத்துவதாக பயமுறுத்துதல்.
3. உண்மையான அல்லது கடுமையான காயம் ஏற்படுத்துவதை தடுக்கத் தவறுதல்.
4. உடலின் பாகங்களைத் தொட்டு மகிழ்வது. அடித்தல், எத்துதல், குத்துதல், அறைதல், தள்ளி விடுதல்.

6.2 நிராகரிக்கப்படுதல்

1. சரியான முறையில் குழந்தைகள் பராமரிக்கப்படாமல் விட்டுவிடுதல்.
2. சரியான உணவு வகைகளைக் கொடுக்காதிருத்தல்.
3. வளர்ச்சிக்கு உதவாத வார்த்தைகளைக்குழந்தைகளிடம் சொல்வது.
4. மற்ற குழந்தைகளோடு ஒப்பிட்டு தரக்குறைவான வார்த்தைகளைப் பேசுவது.
5. தேவைகளை நிறைவேற்றாமல் புறக்கணித்தல்.

6.3 பாலியல் ரீதியான தீங்குகள்

பாலியல் தீங்கிழைப்பு என்பது குழந்தைகளை உண்மையான அல்லது சாத்தியமான உடல் உறவுக்கு உட்படுத்துவதாகும். மேலும் கீழ்காணும் செயல்கள் பாலியல் வன்கொடுமை குற்றங்களாக கருதப்படுகின்றன.

1. குழந்தைகளைக் கற்பழித்தல்.
2. குழந்தைகளிடம் தவறான முறையில் நடந்து கொள்ளும் நடத்தைகள்.
3. உடலுறவு கொள்வதற்கு உட்படுத்துப்படுதல்.
4. குழந்தைகளைத் தவறாக பயன்படுத்துதல்.
5. உடலுறவு கொள்ளாமலே உணர்வுகளை தூண்டுவதன் மூலம் தவறு செய்யத் தூண்டுதல்.

6. குழந்தைகளுக்கு பிடிக்காத செயல்களை செய்தல் / சொற்களை பயன்படுத்துதல்.

6.4 உணர்வுகளுக்கு எதிரான தீங்குகள்

1. குழந்தையின் சுயகவுரவத்தை பாதிக்கின்ற வகையில் தொடர்ந்து தீங்கிழைத்தல்.
2. வேண்டுமென்றே மன வேதனை அடையக் கூடிய காரியங்களை செய்தல்.
3. வளர்ச்சிக்கு பொருத்தமான உதவக்கூடிய சூழலை அளிக்க தவறுதல் (எனவே ஒரு ஆண் குழந்தை / பெண் குழந்தை உணர்வு ரீதியான, சமூக ரீதியான திறமைகளை உருவாக்க தவறுகிறது)
4. கவனக்குறைவாக இருத்தலின் மூலம் மனதை புண்படுத்துதல்.
5. பயமுறுத்துதல்.
6. மற்றவர்களோடு ஒப்பிட்டு சொல்லி குறைகூறுதல்.
7. சமூகத்திற்கேற்ப வளரும் குழந்தைகளின் மன வளர்ச்சியைத் தடுத்தல்.
8. வாய்மொழி மற்றும் எழுத்துக்கள் மூலமாக தீய எண்ணங்களை உருவாக்குவதும் அதை செயல்படுத்த தூண்டுவதும்.

6.5 சமூக மற்றும் ஜாதி அடிப்படையில் எழும் தீங்குகள்

சமூக மற்றும் ஜாதியின் அடிப்படையில் எழுகின்ற தீங்குகள் குழந்தைகளை வெகு சீக்கிரம் பாதிக்கக்கூடிய தீங்குகளாக இருக்கின்றன. அவ்வாறு எழக்கூடிய தீங்குகள் என்று பார்க்கும் போது,

1. கல்வி நிறுவனங்களில் சமயம் மற்றும் ஜாதி அடிப்படையில் சம உரிமைகள் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை.
2. ஜாதி அடிப்படையில் குழந்தைகள் வேறுபடுத்தப்படுதல்.
3. குழந்தைகளை கீழ்த்தரமான சிந்தனைகளோடு பார்த்தல்.
4. அடிமைகளாகப் பயன்படுத்துல்.
5. குழந்தைகள் கொத்தடிமைகளாக விற்கப்படல்.
6. பணியிடங்களில் பாலியல் பலாத்காரங்களுக்கு உட்படுத்தப்படல்.
7. ஜாதி, மதம் இவற்றின் அடிப்படையில் திறமையை நிர்ணயித்தல்.

7. செயல்திட்டம்

பொதுவாக குழந்தைகள் பணிகளுக்குச் செல்லும் பணியிடங்களில் அதிகம் தீங்குகளை அனுபவிக்கிறார்கள் முக்கியமாகப் பெண் குழந்தைகள் பலவிதங்களில் தீங்குகளுக்கு ஆளாகிறார்கள். அவ்வாறு அவர்கள்

அனுபவிக்கும் தீங்குகளை அவர்களால் பெற்றோரிடமோ, உடன் பிறந்தார், உறவினர்களிடமோ சொல்லமுடியாத நிலை. சில சமயம் அவர்களுக்குத் தெரியவந்தும் கண்டு கொள்ளாத நிலை இப்படிப்பட்ட சூழலில் தீங்குகளுக்கு ஆளாகும் குழந்தைகளைச் சந்தித்து, அவர்களை அத்தீங்குகளிலிருந்து பாதுகாப்பதே குழந்தை பாதுகாப்பு கொள்கையின் செயல்திட்டம் ஆகும்.

8. தீங்குகளினால் ஏற்படுகின்ற பாதிப்புகள்

பாதிப்புகளின் தாக்கமானது குழந்தைகளுக்கு நீண்ட பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது. சில சமயம் குழந்தைகளின் மரணத்திற்கும் காரணமாக இருக்கிறது.

இவை இரண்டு விதங்களில் நடக்கிறது.

1. தீங்குகளுக்கு ஆளாக்கப்படுபவரால் கொல்லப்படுவது.
2. அனுபவித்த தீங்குகளுக்கான தாக்கத்தை யாரிடமும் சொல்லாது தானே தற்கொலை செய்வது அல்லது பிறரிடம் பழகுவதை நிறுத்திக்கொள்வது.

புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையின் குழந்தை பாதுகாப்புக் கொள்கை. குழந்தைகளுக்கு பல்வேறு விதங்களில் ஏற்படும் தீங்குகளுக்கும், அத்தீங்குகள் மறுபடியும் குழந்தைகளுக்கு நிகழாவண்ணம் தடுக்க பல செயல் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு நேரிடும் தீங்குகளிலிருந்து பாதுகாக்கிறது.

9. குழந்தைகளோடு பணியாற்றுவதில் புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையின் வழிகாட்டும் நெறிமுறைகள்.

இந்தப் பிரிவு, கொள்கைகளையும், நேர்மறையான அணுகு முறைகளையும் கூறுகின்றது. கீழே கொடுக்கப்பட்டுள்ள மதிப்புகளையும், கொள்கைகளையும் நடைமுறைபடுத்தும் பொழுது குழந்தைகள் தொடர்பாக பணியாற்றும் ஊழியர்கள், பணியாளர்கள் ஆகியோர் குழந்தைகளின் குறைந்த பட்ச எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற உதவுகிறது.

9.1 குழந்தைகளோடு வேலை செய்வதற்கான மதிப்பீடுகளும் கொள்கைகளும்

அனைத்து குழந்தைகளுக்கும் அவர்களுடைய நலனை பாதுகாக்கப் பயன்படும் ஒரு முக்கிய காரணி அவர்கள் உரிமையை நிலை நாட்டுவது / உயர்த்துவது. இதில் புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளை, குழந்தை (அல்லது) இளம் சிறார்களுக்கு அனைத்து உரிமைகளையும் பெற உரிமை உண்டு என்று நம்புகிறது.

❖ குழந்தைகளின் நலன் மற்றும் வளர்ச்சியை பாதுகாப்பது பிரதானமாக கருதப்படுகிறது.

❖ மதிப்பு, மரியாதை கலாச்சாரம், மதம் மற்றும் இனம் அடிப்படையில் அவர்களின்

தேவைகள் அடையாளம் காணப்படல் வேண்டும். குடும்ப சூழலுக்கு ஏற்ப பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

- ❖ அவர்களை பாதிக்கும் கருத்துக்களை மிக கவனமாக கருத்தில் கொண்டு, முடிவெடுக்கும் விஷயத்தில் அவர்களை பங்கேற்க வைக்கவும் உற்சாகப்படுத்தவும் வேண்டும்.
- ❖ ஊழியர்களும் மற்றும் குழந்தைகளுடன் தொடர்புடையவர்களும் குழந்தைகளின் உரிமைகள் மதிக்கப்படுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.
- ❖ எல்லா நேரங்களிலும் அவர்களை மதிப்புடன் நடத்த வேண்டும் அவர்களின் சொந்த உரிமைகளை அங்கீகரிக்க, பங்கேற்க வைக்க உற்சாகப்படுத்த வேண்டும்.
- ❖ எல்லா நேரங்களிலும் குழந்தைகளை மரியாதையுடன் நடத்த வேண்டும் அவர்களின் சொந்த / தனிமனித உரிமையை அங்கீகரிக்க வேண்டும்.
- ❖ ஒற்றுமை உணர்வுடனும், நாமும் ஒரு பங்காளர் என்ற அடிப்படையில் பரஸ்பர நம்பிக்கை / மரியாதையுடன் பணிபுரிய வேண்டும்.

9.2 குழந்தைகளைக் காப்பதில் உள்ள கடமைகள்

குழந்தைகளை காக்கும் கடமை என்பது நமது பொறுப்பாகும்.

- ❖ நாம் யாரை கவனித்துக் கொள்கிறோமோ அவர்களுடைய நலனை நியாயமான முறையில் காப்பதற்கு எடுக்கப்படும் நடைமுறைகள் நியாயமானதாக இருத்தல் வேண்டும்.
- ❖ தீமை விளைவிக்கக்கூடிய செயல்களை கண்டறிந்து அதனை நீக்குவதும் அதனை குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதும் பணியாளர்களுடைய கடமையாகும்.
- ❖ அவர்களுடைய இயற்கை திறன் / மனத்திறன் / திறமை / மறைந்துள்ள சக்தி, பலம் ஆகியவற்றை கண்டறிந்து, உணர்த்தும் வகையில் இணைந்து பணியாற்ற வேண்டும்.
- ❖ அவர்கள் வாழ்க்கை சூழலுக்கேற்ப அவர்களை புரிந்து செயல்பட முயற்சிக்க வேண்டும்.

## நடத்தை விதிகள்

9.3 புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையின் நடத்தை விதிகள்

குழந்தைகளுடன் தொடர்புடைய அனைத்து பணியாளர்களும் கீழ்க்கண்ட நடத்தை விதிகளை கடைப்பிடிப்பது முக்கியமானது.

- ❖ தனியான இடத்திலோ (அல்லது) தனியாகவோ ஒரு குழந்தையுடன் இருக்க கூடாது.
- ❖ ஒருபோதும் தனியாக இருக்கும் குழந்தையுடன் நேரத்தை செலவழிக்க கூடாது.

- ஒருபோதும் குழந்தையைப் (பணியாளர்) தன் இல்லத்திற்கு அழைத்து செல்லுதல் கூடாது.
- வேலை சம்பந்தமில்லாத உறவு முறையோ, சொந்த விஷயம் சம்பந்தமான உறவுமுறையோ தனியாக இருக்கும் குழந்தையிடமோ (அல்லது) குழுவாக இருக்கக் கூடிய குழந்தைகளிடமோ சொந்தம் பாராட்டக்கூடாது.
- பணியாளர்கள் குழந்தைகளிடம் தனிப்பாசம், அன்பு, அக்கறை செலுத்துவதை ஊக்குவிக்கக் கூடாது.
- குழந்தைகளை வெளியில் அழைத்து செல்லும் போது (அல்லது) கண்காணிப்பின் போது குறைந்தபட்சம் இரண்டு பணியாளர்கள் பணியில் இருக்க வேண்டும்.
- குழந்தையை வெளியூருக்கு அழைத்து செல்லும் போது இரவில் குழந்தையோடு தங்கியிருப்பதை தவிர்த்தல் வேண்டும் (ஆண் / பெண்)
- நடைமுறைச்சிக்கல் மற்றும் பிரச்சனைகளின் போது முன் எச்சரிக்கையுடன், ஜாக்கிரதையுடன் செயல்பட வேண்டும்.
- குழந்தையின் பெற்றோர் மற்றும் பாதுகாவலரிடம் குழந்தையின் வெளியூர் பயணதிட்டத்தை அல்லது தங்க வேண்டிய சூழ்நிலையிருந்தால் தகவல் தெரிவிக்கவேண்டும்.
- வேலையையும், வேலை செய்யக் கூடிய இடத்தையும் திட்டமிட்டு செயல்படும் போது சில சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புகள் ஏற்படுவதை தவிர்க்க ஒளிவு மறைவு மற்றும் எந்தவிதமான ரகசிய உறவுமில்லாமல் வெளிப்படையாக செயல்பட வேண்டும்.
- எந்த ஒரு பிரச்சனையாக இருந்தாலும் வெளிப்படையான மனநிலையோடு விவாதிக்கும் (அல்லது) கலந்தாலோசிக்கும் மனநிலை வேண்டும்.
- ஆலோசனை சொல்லும் பொழுதோ (அல்லது) அறிவுரை சொல்லும் பொழுதோ சம்பந்தமில்லாத, எதிர்மறையான, துன்புறுத்தக்கூடிய சொற்களை (அல்லது) வார்த்தைகளை பயன்படுத்தக் கூடாது.
- சம்பந்தமில்லாத பாலியல் பிரச்சனைகளை தூண்டக்கூடிய விதத்தில் உடல் ரீதியான செயல்பாடுகள் இருக்க கூடாது.
- குழந்தைகளை பாதுகாக்கும் பணியாளராக இருந்தாலும் கூட குழந்தைகளுக்காக உழைக்கிறோம், குழந்தைகளுக்காகவே வாழ்கிறோம்.

என்றாலும் கூட தனியான அறையில் அவர்களுடன் தங்குவதோ/ உறங்குவதோ கூடாது.

❖ குழந்தைகளின் செயல்பாடுகள் சட்டத்திற்கு புறம்பாக இருந்தாலோ/ பாதுகாப்பற்ற முறையில் இருந்தாலோ/ துன்புறுத்தக்கூடிய விதத்தில் இருந்தாலோ பணியாளர்கள் எந்த விதத்திலும் அதற்கு உடந்தையாக இருக்கக்கூடாது / பங்கு பெறக்கூடாது

❖ குழந்தைகளை மனரீதியிலான துன்புறுத்தலுக்கு உள்ளாக்கக் கூடாது (உம் அவமானப்படுத்துதலோ / தரக்குறைவாக நடத்துவதோ, பேசுவதோ கூடாது) மற்றும் மனம் நோகும்படி எந்தவிதமான செயல்களையும் செய்யக் கூடாது.

❖ மற்ற குழந்தைகளின் மத்தியில் முன்னுதாரணப்படுத்தி மட்டம்தட்டி பேசுவதோ, அல்லது வித்தியாசமான நடைமுறைகளை செயல்படுத்துவதோ கூடாது.

❖ சுய பொறுப்பு மற்றும் கடமைவுணர்வை பணியாளர்களிடம் வளர்ப்பதன் மூலம் கீழ்த்தரமான நடத்தை மற்றும் துன்புறுத்தலின் மொத்த பண்புகளையும் இல்லாமல் செய்து விட முடியும்.

❖ குழந்தைகள் தாங்கள் சந்திக்கின்ற பிரச்சனைகளை பணியாளர்களிடம் பயமின்றி எடுத்துரைக்க ஊக்குவிக்க வேண்டும்.

❖ அவர்களுடைய உரிமைகளை பற்றி எடுத்து கூறி அவர்களை பலப்படுத்துவன் மூலம் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான தைரியத்தையும் அதற்குண்டான தீர்வை கண்டறிவதற்கான வழிமுறைகளையும் எது சரி, எது தவறு என்பதையும் அவர்களோடு விவாதிக்க வேண்டும்.

## 9.4 பணியாளர்கள் செய்யத் தகாதவை

❖ அடித்தல் / உடல் காயப்படுத்தல் / உடல்ரீதியாக துன்புறுத்துதல் கூடாது.

❖ உடல்ரீதியான / பாலியல் ரீதியிலான உறவுகள் கூடாது.

❖ சுரண்டல் தன்மையிலான / துன்புறுத்துதல் ரீதியிலான / துன்பத்தை விளைவிக்கக் கூடிய விதமான உறவு முறைகளை வளர்த்துக் கொள்ளக்கூடாது.

❖ நேரடியான துன்புறுத்தலுக்கோ (அல்லது) மறைமுகமான துன்புறுத்தலுக்கோ குழந்தை உட்படுத்தும்படி நடந்து கொள்ளக்கூடாது

❖ தனி இடத்திலோ (அல்லது) பொது இடத்திலோ குழந்தையை திட்டுவதோ, மட்டமாக பேசுவதோ, நடத்துவதோ கூடாது.

❖ எந்த காரணத்திற்காகவும் குழந்தைகளை வேறுபாட்டுடனோ, பாகுபாட்டுடனோ நடத்துதல் கூடாது.

❖ மட்டமான / கீழ்த்தரமான / அதீத துன்புறுத்தலுக்கான வார்த்தைகளை உட்படுத்தும் நடவடிக்கை மற்றும் நடத்தைகளை பணியாளர்கள் கட்டாயம் தவிர்க்க வேண்டும். குழந்தை துன்புறுத்துதல் நடப்பதற்கு ஏதுவான காரியங்களை தவிர்த்தல் வேண்டும்.

❖ பிரச்சனைகள் எழும் போது அவர்களின் உரிமைகளை எடுத்துக்கூறி எது ஏற்றுக் கொள்ளக் கூடியது, எது ஏற்றுக் கொள்ள கூடாது என்பதை புரியவைக்க வேண்டும்.

10. புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையின் குழந்தை தீங்கிழைப்பு சம்பந்தமான புகார் மற்றும் அறிக்கை அளித்தல்

❖ புகார் எழுப்புதலின் அவசியம்:

பணியாளர்களும் மற்றவர்களும் தங்களது கருத்துகளை வெளிப்படுத்துவதில் ஏன் தயங்குகிறார்கள் என்பதற்கு பல காரணங்கள் உள்ளன. இந்த தயக்கம் வழக்கமாக கீழே கூறப்பட்டுள்ள கருத்துக்களோடு தொடர்புடையது.

எங்கே பலாத்காரத்தைப் பற்றிய தகவல் அல்லது சந்தேகம் நிலவுகிறதோ அங்கே முதலில் குழந்தை நலனில் அக்கறை செலுத்த வேண்டும். இரண்டாவது குழந்தை தன்னையே புரிந்து கொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகளை எடுத்துக் கூற வேண்டும். குழந்தை பலாத்கார நிகழ்வுகளில் வழக்கமாக நடைபெறுவது என்னவென்றால் பலாத்காரம் செய்யப்பட்டவர் அல்லது பலாத்காரம் செய்ப-வரை தவிர இன்னொரு நபர் அந்த சூழ்நிலையை அறிந்துள்ளார் அல்லது பலாத்காரம் நிகழ்ந்துள்ளது என்று சந்தேகம் கொள்கிறார் இருந்தபோதிலும் யாருக்கு இந்த நிகழ்வு தெரியுமோ அல்லது பலாத்காரம் நிகழ்ந்து உள்ளது என்று சந்தேகிக்கின்றார்களோ அவர்கள் உடனடியாக செயல்படுவதில்லை அல்லது நடவடிக்கை எடுக்க தாமதிக்கின்றனர். பாதிக்கப்பட்ட குழந்தை தனக்கு ஏற்பட்ட பாதிப்பை மனதில் வைக்காமல் தைரியத்துடன் யாரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டும்.

புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையுடன் தொடர்புடைய எந்த ஒரு நபரும் பலாத்காரத்தைப் பற்றி தெரிந்தாலோ அல்லது சந்தேகப்பட்டாலோ உட-னடியாக அந்தத் தகவலை நிறுவனத்திற்கு வெளிபடுத்த வேண்டும் என்று இந்த கொள்கையின் மூலம் வலியுறுத்துகிறது.

10.2 பொறுப்பும், பங்களிப்பும்:-

குழந்தைகளுடன் தொடர்புடைய எந்த ஒரு நபரும் குழந்தைகளுடைய பாதுகாப்பு மற்றும் நலனில் அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும் பணியாளர்களும் மற்றவர்களும் குழந்தைகள் பிரச்சனைகளைப் பற்றி பணியாளர்களில் மூத்த பணியாளரிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும். ஒரு

முடிவு கிடைக்குமானால் பிரச்சனையின் தாக்கத்தை குறைக்கலாம். மற்றொரு கருத்து என்னவென்றால் மேல்நடவடிக்கை பொறுத்தமானது என்பதை உணர்ந்து கொள்ளுதலாகும். இந்தப் பிரச்சனைளைப் பற்றி மேலும் விவாதிக்க வேண்டியதில்லை. இத்தகைய பிரச்சனைகள் பதிவு செய்யப்பட்டு அந்த பதிவேடுகள் பாதுகாப்பான பூட்டப்பட்ட இடத்தில் வைக்கப்பட வேண்டும்.

## 10.3 புகார் கொடுக்க தயங்குவதற்கான காரணங்கள்:

- ❖ குழந்தை துன்புறுத்தல் சம்பந்தமாக குரல் கொடுப்பதற்கு பணியாளர்களோ அல்லது மற்றவர்களோ தயங்குவதற்கு (அல்லது) விருப்பமில்லாமல் இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கிறது. கீழ்கண்ட காரணங்களால் இந்த விதமான விருப்பமின்மை / தயக்கம், மன உளைச்சல்களாலும், மனவிரக்தியினாலும் குறைந்து விடுகிறது.
- ❖ சம்பந்தப்பட்டவர்(அல்லது)அந்த பணியாளர் தான் தவறாக எண்ணப்பட்டு விடுவோமோ என்ற பயம்.
- ❖ நம்பாமல் போய் விடுவார்களோ என்ற பயம் / தயக்கம்
- ❖ அப்படியே நம்பப் பட்டாலும், அந்த புகாரை நிருபிப்பதற்கான சாட்சி / ஆதாரங்களை கொண்டு நிரூபிக்க முடியாமல் போய் விடுமோ என்ற பயம் / தயக்கம்.
- ❖ புகார் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தீவிரமான பின் விளைவுகளை உண்டாக்கி தனது வேலை / உடன் பணியாளர்கள் / நிறுவனம் பாதிக்கப்பட்டு விடுமோ என்ற பயம் / கவலை
- ❖ எதிர்விளைவுகளை ஏற்படுத்தி விடுமோ / தாக்கத்தை ஏற்படுத்தி விடுமோ / பாதிப்பை ஏற்படுத்துமோ என்ற பயம்.
- ❖ துஷ்பிரயோக புகாரின் அடிப்படையில் சந்தேகத்திற்குண்டான நபர் குழந்தையின் பெற்றோராகவோ/ பாதுகாவலர்களாகவோ / நிறுவன உறுப்பினர்களாவோ இருந்து அந்த குற்றச்சாட்டு ஊர்ஜிதமானால் உண்டாகக் கூடிய விளைவுகள் அது தீவிரமாக இருக்கும் என்ற பயம்.

இந்த மாதிரியான விஷயங்களுக்கு உள் கட்டமைப்பின் மூலம் பிரச்சனைளை விவாதிப்பதன் மூலமாகவோ (அல்லது) முன்னெடுத்துச் செல்வதன் மூலமாக-வோ தீர்வுகாணலாம். இதன் தொடர் நடவடிக்கையாக குழந்தை தீங்கிழைத்தல் (அல்லது) குழந்தை பாதுகாப்பு இவற்றில் தொடர்புள்ள தேர்ச்சி பெற்ற அமைப்புகளின் உதவிகளை பெறலாம், அதற்கேற்றவாறு சரியான பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க உதவலாம்.

## 11. அங்கீகாரம் :

எப்பொழுது குழந்தைகள் மீது அக்கறை கொள்வது சரியானது?

துரதிஷ்டவசமாக இந்தக் கேள்விக்கு நேரடியான நியாயமான பதில் இது-வரை இல்லை. சில நேரங்களில் குழந்தைகள், தீங்கிழைப்பு சம்பந்தமாக, அலட்சியம் காட்டமுடியாத, அபாயகரமான காயங்களையோ, அறிகுறிகளையோ வெளிப்படுத்துவார்கள். அப்படியே இருந்தாலும் அவர்கள் காட்டக் கூடிய / சொல்லக்கூடிய அடையாளங்கள்/ அறிகுறிகள் தெளிவாக சுலபமாக காணக்கூடிய / விதமாக இல்லாமல் இருக்கலாம். மேலும் இது சம்பந்தமான பிரச்சனைகள் ஒரு நிகழ்வு மூலம் வெளிப்படுவதில்லை.அநேக விஷயங்களில், இவை தொடர்ச்சியாக குறிப்பிட்ட காலகட்டங்களில் நடைபெறும்.

இது போன்ற சமயங்களில் குழந்தைகள், தான் பாதிக்கப்பட்டிருப்பதை வெளிப்படுத்துகிறார்கள். இந்த மாதிரியான சூழ்நிலைகளில் அமைதியாக, ஆதவுடன், அக்கறையுடன், கவனமுடன் கையாள்வது மிக முக்கியமானது. இந்த மாதிரியான சமயங்களில் பாதிப்புக்குள்ளான குழந்தையை குறை கூறுவதோ, குற்றம் கூறுவதோ ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது, மேலும் அதில் அவர்கள் சம்பந்தப்பட்டிருந்தாலோ அல்லது பாதிக்கப்பட்டிருந்தாலோ அதனால் ஒன்றும் பாதிப்பில்லை, தவறில்லை என்பதை தெளிவாக ஊர்ஜிதம் செய்ய வேண்டும், நம்பிக்கை அளிக்க வேண்டும்.

## 12. பிரச்சனைகளை வெளிக் கொணர்வதில் எழக்கூடிய நம்பகத்தன்மை மற்றும் தவிர்க்க கூடாத விஷயங்கள்:

ஒரு குழந்தை வெளிப்படுத்துகின்ற விஷயங்கள் / ரகசிய தகவல்கள் உண்மையான கவனத்துடனும், சிரத்தையுடனும்,கேட்கப்படுகிறது (அல்லது) கவனிக்கப்படுகிறது என்பதை குழந்தை உணரும் விதத்தில் செயல்பாடுகள் இருக்க வேண்டும். குழந்தைகள் சொல்லக்கூடிய தகவல்களை அவர்கள் எப்படி சொல்ல விரும்புகிறார்களோ அவர்கள் பாணியிலேயே சொல்ல அனுமதித்து கவனமாக கேட்க வேண்டும். அவர்கள் வெளிப்படுத்திய/ சொல்லிய விஷயத்தை பொறுத்தமாக இருந்தால் உடனுக்குடன் / பதிவு செய்யப்படவேண்டியது கட்டாயமும், முக்கியமும் ஆகும். அந்த கால கட்டத்தில் தீங்கிழைப்பு பற்றி விரிவாக விசாரிப்பது உகந்ததல்ல. அது அவ்வளவு சரியானதாகவும் இருக்காது பாதிக்கப்பட்ட குழந்தையிடம் சம்பவம் பற்றி கேள்வியை நேரடியாகவோ, மனம் புண்படும்படியோ கேள்விகள் கேட்காமல் இருப்பதும், குழந்தை கூறுவதை கவனமாக கேட்பதுடன் அதற்கு செவிசாய்ப்பதும் மிக முக்கியமானது.

பாதிக்கப்பட்ட குழந்தைக்கு தேவையான தகவல்களையும், விளக்கத்தையும் இதன்பின் விளைவு என்ன என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். முக்கியமாக இதன் தொடர்ச்சியாக பணியாளரோ அல்லது சம்பந்தப்பட்ட நபரோ

நிறுவனத்தின் நிர்மாணிக்கப்பட்ட வரைமுறைக்குட்பட்டு தீங்கிழைப்பு குற்றத்தை வெளிக்கொணர வேண்டும் ( அல்லது) அறிக்கை கொடுக்க வேண்டும்.

குழந்தை தீங்கிழைப்பு சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தனிநபர் மீதோ (அல்லது) நிறுவனத்தின் மீதோ (அல்லது) குழந்தைகளை வழிநடத்தக் கூடிய ஆண்/பெண் நபர்கள் மீதோ சுமத்தப்படலாம். குழந்தைகளுடன் வேலை செய்யக்கூடியவர்களின் பலவீனமான அணுகுமுறை மற்றும் அனுபவமின்மை கூட குழந்தைகளின் பாதுகாப்பின்மை மற்றும் அபாயகரமான சூழலை உண்டாக்குகிறது. உதாரணமாக, எங்கெல்லாம் ஒரு பணியாளர் அடிக்கடி குழந்தையுடன் தனியாகவோ (அல்லது) இல்லத்திலோ வேலை செய்யப் பணிக்கப்படுகின்றாரோ அங்கெல்லாம் இந்த மாதிரியான நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றது. இது உடனடியாக புகார் மூலம் தெரிவிக்கப்படவேண்டும். குறிப்பிட்ட நபர்மீது சொல்லப்படுகின்ற சந்தேகப்படும்படியான நடவடிக்கைகளையோ (அல்லது) குற்றச்சாட்டுகளையோ ஒருபோதும் புறக்கணிக்ககூடாது. எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை முடிவு செய்து செயல்படுத்துவது மிக முக்கியமானது.

## 12.1 நம்பகத்தன்மை

சம்பந்தப்பட்ட குழந்தையின் செய்திகளை வெளியிடுவது பற்றிய முடிவை தெளிவுபடுத்த வேண்டும் மேலும் குழந்தைகளின் கருத்தையும், செய்தியையும் வெளியிடுவது பற்றி சம்மதம் பெறப்பட வேண்டும். குழந்தைகளோடு பிரச்சனைகளின் தாக்கம் நிகழ்வுகளின் தொடர்ச்சி பற்றி விவாதிக்க வேண்டும், தெளிவுபடுத்தவேண்டும்.

இந்த கொள்கையின் விதிகளை அமல்படுத்தும் (அல்லது)நிர்வாகிக்கும் ஒரு பகுதியாக, நம்பபத்தன்மை மதிக்கபட வேண்டிய அத்தியாவசியமான ஒன்று. ஒரு சூழ்நிலையில் நம்பகத்தன்மை குறைவுபடும் பொழுது அது குழந்தைகளின் வாழ்க்கையையும் இதன் விளைவாக இதில் சம்பந்தப்பட்டவர்களையும் பாதிக்கிறது. கடுமையான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

பணியாளர்களும் மற்றும் இதில் சம்பந்தப்பட்டவர்களும் தகவல்களை பாதுகாப்பதிலும் இந்தப் பாதுகாப்பு கொள்கையில் விவரிக்கப்பட்டுள்ளபடி அறிக்கை அளிப்பதிலும் மிகவும் எச்சரிக்கை உணர்வோடு கவனத்துடன் இருக்க வேண்டும். அவர்கள் எந்த சூழ்நிலையிலும் என்ன விஷயம் அறியப்பட்டு இருக்கிறது அதை தவிர்க்க ( அல்லது குறைக்க) என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற ரகசியத்தை, விஷயங்களை வெளிப்படுத்தக் கூடாது.

## 12.2 குழந்தைகளோடு பணியாற்றுவதில் நம்பகத்தன்மை

சில வேலைகளில் பெறப்பட்ட (அல்லது) கொடுக்கப்பட்ட தகவல்கள், குழந்தையை பாதுகாக்கும் நோக்கத்தில் / ஆர்வம் காரணமாக குற்றம் புரிந்தவருக்கு எதிராக வெளியிடப்பட்டிருக்கலாம். குற்றம் புரிந்த நபர் குழந்தையாக இருக்கும் பட்சத்தில் இது பெரிய பிரச்சனையாக இருக்கும். இதன் காரணமாக இந்த மாதிரியான தகவல்களை தெளிவாக்குவது மிக முக்கியமான ஒன்றாகும்.உதாரணமாக எழுந்து மூலம் உள்ள கொள்கையோ (அல்லது) கோட்பாடுகளோ, உடனே செயல்படுத்த முடியாமல் இருக்கலாம். எனவே எந்த சூழ்நிலையிலும் வாக்குறிதிகள் செய்யப்படக் கூடாது முக்கியமாக பாதிக்கப்பட்ட குழந்தைகளிடம் கூடவே கூடாது.

## 12.3 நம்பகமான பதிவேடுகள் பராமரித்தல்

❖ 24 மணிநேரத்திற்குள்ளாக எழுப்பபட்ட (அல்லது) கூறப்பட்ட புகார் / குற்றச்சாட்டு உடனடியாக பதிவு செய்யப்படவேண்டும். பதிவு செய்யப்பட்ட தகவல்களில் தேதி, கையொப்பம் இடம் பெற்றிருக்கவேண்டும். எழுதப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என பணியாளரால் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

❖ முக்கிமாக பாதிக்கப்பட்ட குழந்தை கூறிய தகவல்கள் பதிவு செய்யப்படும் பொழுது எந்த விதமான மாற்றமுமில்லாமல் விரிவாக அதே சமயத்தில் சரியான, ஊர்ஜிதமான தகவல்கள் இடம்பெற வேண்டும். சொந்த கருத்துகளைப் புகுத்தக் கூடாது. இந்த அறிக்கையில் தீங்கிழைப்பின் பின்னணி, தீங்கிழைப்பின் தன்மை, யார் முன்னிலையில், என்ன நடந்தது? அதன் தொடர்ச்சி என்ன? போன்ற விவரங்கள் இருக்க வேண்டும். அது சம்பந்தப்பட்ட, அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட வேண்டும்.

❖ யாரும் பிரவேசிக்க வாய்ப்பில்லாத, தடைசெய்யப்பட்ட பாதுகாப்பான இடத்தில் (அறையில்) வைத்து இந்த குறிப்புகள் / ஆவணங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். குழுவின் மைய பொறுப்பாளரே இதற்கு பொறுப்பானவர், இந்த தகவல்களை / ரகசியத்தை நம்பிக்கையாக பாதுகாப்பதிலும் அதை தொடர்புள்ள நபர்களிடமோ (அல்லது) யார் இந்த ரகசியங்களை பாதுகாப்பாக வைத்திருப்பார்கள் என்று கருதுகிறோமோ அவரிகளிடம் மட்டுமே தெரியப்படுத்தவேண்டும். இது தொடர்பாக பரிமாறப்படும் தகவல்கள் வாய்மொழி மூலமாகவோ, மின் அஞ்சல் மூலமாகவோ, மின்சாதனங்கள் மூலமாகவே நடைபெறும் பொழுது நம்பகத்தன்மையுடன் ரகசியம் காக்கப்படப் கூடியதாக இருக்கவேண்டும்.

## 13. விசாரணை முறையும் / பொறுப்பு அதிகாரிகளும்

தீங்கிழைப்பு பற்றிய புகார் (குழந்தை அல்லது பணியாளர்)

↓

குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரி (விசாரணை செய்து அறிக்கை அளித்தல்)

↓

குழந்தை பாதுகாப்பு அமைப்பு
அல்லது
தலைமை கண்காணிப்பாளர்
(அறிக்கையை பரிசீலனை செய்தல்)

↓

செயலர் (பரிசீலனை செய்த அறிக்கையை முறைப்படி விசாரித்து உயர்மட்டக்குழுவிற்கு அளித்தல்)

↓

நிர்வாக உயர்மட்டக் குழு (அறிக்கையின் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து இயக்குநருக்கு தெரிவித்தல்)

↓

இயக்குநர் / நிறுவனர் (மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையை தீர்மானித்தல்)

இவ்வாறாக, அனைத்து சம்பந்தப்பட்ட தீங்கிழைப்பு பற்றிய புகார்களை பணியாளருக்கு, தன்னார்வலர் தெரிவிப்பார். பணியாளரே அந்த புகாரில் சம்பந்தப்பட்டவராக இருப்பின் அதற்கு மேற்பட்ட தொடர்புள்ள அதிகாரியிடம் தெரிவிப்பார். இது அந்தந்த நிலைமைக்கேற்றவாறு சம்பந்தப்பட்ட புகார்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் சமயத்திற்கேற்றவாறு கொண்டு சொல்லப்படும். எது எப்படியாகிலும் பாதிக்கப்பட்ட குழந்தை நிறுவனத்தில் உள்ள யாரிடமும் நேரடியாக இது பற்றிய புகார்களை தெரிவிக்க முடியும்.

## 14. அறிக்கைகளை செயல்படுத்தும்முறை

புகார்களை அமல்படுத்துவதில் (செயலாக்குவதில்) புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையானது இரண்டு நிலைகளில் செயல்படுகின்றது.

### நிறுவனம் சார்ந்த அறிக்கை

பெறப்பட்ட புகார்கள் / தகவல்கள் மேற்கூறியவாறு விவாதிக்கப்பட்டு விசாரிக்கப்படவேண்டும். இது எந்தவிதமான தாமதமுமின்றி செயல் திட்டத்தின் அடிப்படையில் விவாதிக்கப்பட்டு இறுதி செய்யப்பட வேண்டும். சில சந்தர்ப்ப சூழ்நிலைகளால் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்க அவசியம் இல்லாமல் போகலாம், எது எப்படி இருந்தாலும் இதன் முக்கிய நோக்கமானது சம்பந்தப்பட்ட பிரச்சனை / புகார் விசாரிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு அதன் தெளிவான வெளிப்பாடுகள் வெளிக் கொணரப்பட வேண்டும்.

### நிறுவனம் சாராத அறிக்கை

நிறுவனத்திற்குட்பட்ட விசாரணையின் அடிப்படையிலோ அல்லது அதன் தொடர்ச்சியாகவோ (அல்லது) நடடிவக்கையின் முக்கியத்துவம் முன்னிட்டு பிரச்சனை சம்பந்தமாக, பிரச்சனைகளை கையாளக்கூடிய தனியார் விசாரணை அமைப்புக்கு பரிந்துரைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் இந்த நடவடிக்கையானது குழந்தைகளை பாதுகாப்பது சம்பந்தமாக எடுக்கப்படும் / நடத்தப்படும் விசாரணையில் நிறுவனத்தின் தலையீடு சட்டப்பூர்வமாக இல்லை என்பது உறுதி செய்யப்படவேண்டும். குழந்தைகளின் பிரச்சனைகளுக்கு முடிவு எடுக்கும் பொழுது குழந்தை பாதுகாப்பு அதிகாரியுடன் கலந்து பேசி வெளி நிறுவனத்தின் சம்மதத்தோடு நிறுவனத்தின் செயல்ர் முடிவு எடுக்க வேண்டும்.

குழந்தைகளின் சிறப்பு நலன் என்ற கொள்கை மற்றும் சிறப்பான வெளிப்பாடுகளை பெறுவதில் எடுக்கப்படகூடிய நடவடிக்கைகளில் குழந்தைகள் தான் முக்கியத்துவம் பெற வேண்டும்.

சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை தனியார் துப்பறியும் நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதை நிறுவனத்தின் செயலர் (அல்லது) நிறுவனர், குழந்தை பாதுகாப்பு மைய அதிகாரியின் ஆலோசனையின் பேரில் செயல்படுத்த வேண்டும் / முடிவு செய்ய வேண்டும்.

குழந்தை தீங்கிழைப்பு தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் அனைத்தும் மிக உயரிய நோக்கமான குழந்தைகளின் உயர்வில் / மேம்பாட்டில் உள்ள அக்கறை மற்றும் குழந்தைகளுக்கு கிடைக்கக்கூடிய சிறந்த நன்மைகளை பாதுகாப்பதில் உள்ள உறுதியை குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு / குடும்பத்துக்கு தனியார் அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் உதவி செய்வதில் / ஆறுதலாக நடந்து கொள்வது புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையின் பணியாளர் மற்றும் தொடர்புடைய மற்றவர்களும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமான ஒன்று. இந்த விஷயத்தில் தொடர்ச்சியான பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

## 15. மதிப்பீடும், பரிசீலித்தலும்

வளர்ந்து வரும் காலச் சூழ்நிலைக்கேற்ப இந்த கொள்கையிலும் மாற்றங்களை கொண்டுவர வேண்டும். இந்த தேவையின் அடிப்படையில் வருடத்தோறும் இந்தக் கொள்கையை பரிசீலிப்பது அவசியம். எனவே வருடத்திற்கு ஒருமுறை உயர்மட்டக் குழுவை கூட்டி பரிசீலிப்பதும் அதற்கேற்றவாறு கொள்கையில் மாற்றங்களை கொண்டு வருவதும் அவசியம். குறைந்த பட்சம் மூன்று வருடத்திற்கு ஒருமுறை கொள்கை பரிசீலனை நடத்துவது கட்டாயமான ஒன்றாகும். இதை நடைமுறைப்படுத்துவதில் புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளை உறுதியாக இருக்கிறது.

# பணியாளர் உறுதிமொழி படிவம்

1. குழந்தைகள் பாதுகாப்பு கொள்கை மற்றும் அதன் ஷரத்துக்கள் அனைத்தையும் படித்து, புரிந்து கொண்டேன் என்றும்,

2. குழந்தை பாதுகாப்பு கொள்கையில் உள்ளபடி கடமையை செய்வேன் என்றும்,

3. என் மீது எந்த விதமான குழந்தை சம்பந்தப்பட்ட புகாரோ அல்லது வழக்கு விசாரணையோ இல்லை என்றும்,

4. நிறுவனத்தில் வேலை செய்யும்பொழுது குழந்தைத் தீங்கிழைப்பு சம்பந்தமாக என்மீது ஏதாவது புகார் தெரிவித்து விசாரணை என்று வந்தால் அது சம்பந்தமாக அதிகாரிகள் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்பேன் என்றும், இதன் மூலம் உறுதி அளிக்கிறேன்.

பெயர் :

பதவி நிலை : கையொப்பம்

தேதி :

# குழந்தை தீங்கிழைப்பு சம்பந்தமான விசாரணை படிவம்

குழந்தையின் பெயர் :

பாலினம் : ஆண் / பெண்

வயது :

முகவரி :

பெற்றோர் பெயர் :

முகவரி :

தொலைபேசி :

தீங்கிழைப்புக்கான சூழல் :

அறிகுறிகள், காயங்கள் மற்றும் நிகழ்வு விபரம் :

சந்தேகத்துக்கு இடமான நபரின் முகவரியும், அடையாளமும் :

தேதி :

பெயர் :

கையொப்பம் :

# OUR OTHER PUBLICATIONS





Dr.I.Sebastian M.A.,M.B.A.,Ph.D.,
Founder & Executive Director.


**St.Joseph's Development Trust,**
A Centre for Developmental Activities
Genguvarpatti(P.O)625 203,Periyakulam Taluk,Theni District
Tamilnadu State,South India.
Tel: 0091(0)4546-236 856 / 236 342.
Email: sebaedsjdt@gmail.com / edsjdt@rediffmail.com
Web: www.sjdt.in


# புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளை